## <u>செயற்குழு கூட்டம் (26-3-2022)</u>

**இன்று (26-3-2022) நமது இயக்கப் பொதுச் செயலாளர் தலைமையில் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. சில எதிர்பாராத காரணங்களால் தலைவர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. கூட்டத்தில் மற்ற செயலாளர்களும்** 2 **பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன..**

1) ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் டிசம்பர் 2021 முதல் பிப்ரவரி 2022 வரையிலான வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேறியது.

2) உறுப்பினராவதற்கு வந்த விண்ணப்பங்கள் கீழ்வருமாறு:-
    - திரு வி சந்திரன் அவர்கள் ஆண்டு உறுப்பினரிலிருந்து ஆயுள் உறுப்பினராக;
    - திரு ராதா கிருஷ்ணன் அவர்கள் ஆண்டு உறுப்பினராக;
    - திரு ராஜேஷ் கணேசண் அவர்கள் ஆயுள் உறுப்பினராக;

    திரு வி.சந்திரன் அவர்களின் விண்ணப்பம் மீண்டும் சரி பார்த்து அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும். திரு ராதாகிருஷ்ணன் அவர்கள் இவ்வியக்கத்தின் முன்னாள் மேலாளராகப் பணி புரிந்தவர், அவருடைய பழைய அலுவலக ஆவணங்களை சரி பார்த்து, அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும். திரு ராஜேஷ் கணேசன் அவர்களின் விண்ணப்பத்தில் ஆதார் கார்டு இணைக்கப்படவில்லை. உறுப்பினரின் ஆதார் கார்டு கிடக்கப்பெற்றவுடன் அவரது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்.

3) 2022-2025 ஆண்டுக்கான நிர்வாகக்குழுவைத் தேர்ந்தெடுக்க தேர்தல் குழு அமைக்கவுள்ளது. திரு வி முத்துசாமி அவர்களை தேர்தல் குழுத் தலைவராக நியமிக்க முடிவெடுக்கப்பட்டது

4) நமது இயக்கத்தின் அடுத்த நிர்வாகக்குழுக் கூட்டம் ஏப்ரல் மாதம் மூன்றாவது வாரம் நடத்த வேண்டுமாறு கோரிக்கை எழுந்துள்ளது.

இறுதியில் பொது செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

ந.சுப்ரமணியன்
தலைவர்

வி.கார்திகைராஜன்
பொதுசெயலர்